**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்</u>**

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 25 ஆம் நாள் திங்கட்கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி.க. இந்துமதி, கிரேடு III பென்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No. 156/2018** வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | சுப்பரமணியன் | **வயது** | : | 71 |
| **த.பெ** | : | கோவிந்தசாமி | **தாலுக்கா** | : | போளூர் |
| **கிராமம்** | : | பால்வார்த்துவென்றான் | **தொழில்** | : | விவசாயம் |

**<u>25.08.2025 – வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1) பிரதிவாதி என்னுடன் பிறந்த சகோதரர் ஆவார். நான் எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் கிணற்றிலிருந்து என் நிலததிற்கு செல்லும் கால்வாய் வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி கிணறு எந்த சா்வே நெம்பரில் உள்ளது என்றால் எனக்கு ஞாபகமில்லை. கிணறு உள்ள சா்வே நெம்பர் என் தந்தை **வா.சா.ஆ.2** உயில் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளாரா என்றால் குறிப்பிட்டுள்ளார். **வா.சா.ஆ-2** உயில் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் தவிர என்தந்தைக்கு வேறுசொத்துக்கள் இல்லை என்றால் சரிதான். உயிலில் கால்வாய் பற்றி உயிலில் தெரிவிக்கப்பட்டுள்ளதா என்றால் எனக்கு படிக்கதெரியாது ஆகையால் எனக்கு தெரியாது.

2) மேற்படி கால்வாய் எதுவும் இல்லை, கால்வாய் இருந்திருந்தால் உயிலில் குறிப்பிட்டுயிருப்பார் என்றால் சரியல்ல நான் 40 வருடங்களாக அனுபவித்து வருகிறேன் கால்வாய் இல்லை என்றால் எப்படி பாசனம் செய்திருப்பேன். நீதிமன்ற ஆணையர் அறிக்கை விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் எந்த சர்வே நெம்பர் மூலம் கால்வாய் செல்கிறது என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் தெரியாது. கிணறு இருக்கும் சர்வே நெம்பரின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் எனக்கு தெரியாது. எனது தாவாவில் கிணறு எந்த சர்வே நெம்பரில் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் எனக்கு தெரியாது.

3) உயிலில் (**வா.சா.ஆ-2**) எந்த சர்வே நெம்பரில் கிணறு உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் தெரியாது. நான் கூறும்படி வழக்குசொத்தில் கால்வாய் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியின் நிலத்தில் கால்வாய் பிடிக்க வந்தேன் அதை தான் அவர் தடுத்துநிறுத்தினார் என்றால் சரியல்ல, பிரதிவாதிதான் ஏற்கனவே இருந்த கால்வாயை அழித்துவிட்டார். எனக்கு ஆள்பலம் இருப்பதால் தான் நான் ஆள்பலம் பயன்படுத்தி கால்வாயை பிடித்துவிட்டேன் என்றால் சரியல்ல (சாட்சி தற்போது அழுதுகொண்டு பதில் கூறுகிறார்)

ஆகையால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தவறு என்றால் சரியல்ல. ஆகையால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கை தள்ளுபடி செய்யபடவேண்டும் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது.

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-B.Salma,
District Munsif,
Polur.